**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**<u>O.S.No. 10/2024</u>**

**2026 –ம் வருடம் மார்ச் திங்கள் 13ம் நாள் வெள்ளிக்கிழமை பிரதிவாதி சாட்சி DW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. திலகவதி என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**செல்வி.சௌந்தர்யா த/பெ. அனுமன் வயது. 30 ஊர். கோடநாடு**

---

**வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>DW1 குறுக்கு விசாரணை 12.17 P.M.</u>**

1. சுனித்ரா எனது அம்மாவா என்றால் சரிதான். என் அம்மாவிற்கு இந்த வழக்கை பற்றி என்னை விட நன்கு தெரிந்திருந்தும் அவர் ஏன் சாட்சியம் அளிக்க வரவில்லை என்று சொன்னால் என் அம்மா படிக்கவில்லை என்பதால் நான் சாட்சி அளிக்கிறேன். இந்த வழக்கில் நான் போட்ட பதிலுரையில், வழக்கு சொத்தின் சர்வே எண் தவறு என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான், எது வழக்கு சொத்தின் சரியான சர்வே எண் என்றால் 4/116 ஆகும். வழக்கு சொத்தின் சர்வே எண் என்றால் 4/116 என்பதை நான்தான் நிரூபிக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். A அட்டவணை சொத்தில் வாதிக்கு அரசால் பட்டா வா.த.சா.ஆ.2 வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் தாத்தா முத்தனுக்கும் பட்டா கொடுத்துள்ளார். ஒரு பூமிக்கு இரண்டு நபர்களுக்கு பட்டா வழங்க முடியாது என்றாலும் வாதி ராமசந்திரனுக்கு கொடுத்துள்ளார்கள் என்று

சொன்னால் சரியல்ல.

2. என் தாத்தா முத்தனுக்கும் பட்டா கொடுத்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அசல் பட்டா எங்கு உள்ளது என்று சொன்னால் ஊர் தலைவரிடம் உள்ளதால் நகலை தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தா ஆரம்பத்தில் இந்த வழக்கு சொத்தில் அனுபவம் செய்து வந்தார் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 01.01.2010ல் எனக்கு வயது சுமார் 20 இருக்கும். 01.01.2010ல் எனது அப்பாவும், வழக்கின் வாதியும் சொத்தை பாகம் பிரித்துக் கொண்டதில் வழக்கு சொத்து என் அப்பாவுக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த பாகப்பிரிவினை பற்றி என் அம்மாவுக்கு நன்கு தெரியும் என்பதால் தான் அவரை சாட்சியம் அளிக்க அழைத்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. தான செட்டில்மெண்ட் பத்திரம் வா.த.சா.ஆ.1 ஐ என் அப்பா பாகப்பிரிவினை ஏற்பட்டதால்தான் வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் பாகப்பிரிவினையே ஏற்படாமல் எழுதிக் கொடுத்ததால் செல்லாது. தான செட்டில்மெண்ட் பத்திரம் வா.த.சா.ஆ.1 பற்றி என் அம்மாவுக்கு நன்கு தெரியும் என்றால் என் குடும்பத்தில் யாருக்கும் தெரியாது. என் அம்மாவுக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. 2010ல் இருந்து இதுவரை தாவா சொத்தில் அனைவருக்கும் பாகம் உள்ளது என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். உண்மையில் பாகம் எங்களுக்கு இருந்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால்

சரியல்ல. என் அப்பா எழுதிக் கொடுத்த பிறகு வாதி அந்த இடத்தில் ஒரு வீடு கட்டி வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். வாதி வீடு கட்டிய அந்த இடத்திற்கு அருகில் உள்ள சிறிய இடத்தில் 01.01.2022ல் நாங்கள் A அட்டவணை சொத்தில் 100 அடிக்கு தகர செட் போட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் தகர செட் போட எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அனைவரும் சேர்ந்துதான் செட் போட்டுள்ளோம்.

4. இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தில் போட்டுள்ள செட்டை காலி செய்து கொடுக்க வேண்டும் என போட்டுள்ளார். என் அப்பா 2020–ல் இறந்துவிட்டார். தாவா சொத்து 2010–ல் எழுதிக் கொடுத்த பின்னர் 10 வருடங்கள் கழித்து தான் எழுதிக் கொடுத்த விவரம் தெரியவந்தது. தாவா சொத்தின் நிலத்தையும், வீட்டையும் வா.த.சா.ஆ.4ன் மூலம் Mahindra Rural Housing Finance Ltd–ல் அடமானம் வைத்து அதனை பைசல் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. A அட்டவணை சொத்திற்கு வாதிதான் வரி செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரிதான். வாதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண். 104/119 என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நாங்கள் கட்டியுள்ள தகர செட்டை காலி செய்து கொடுக்க வேண்டும் என்றும், தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு உரிமை இருந்தால் எதிர் வழக்காக தாக்கல் செய்து பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா ஏமாற்றி சொத்தை விற்று விட்டாரா என்றால்

அவ்வாறு விற்கவில்லை.

**Sd/- G. Amirdham, 13.03.2026**
**District Munsif,**
**Kotagiri.**